படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கும் திறமையுள்ளவர்களுக்கும் மேலும் கஷ்டமான நிலையும் அவர்களுக்கு வாய்ப்பில்லாத நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, உதவி பெறும்படியான தனியார் பள்ளிகளுக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துகின்ற நிலையைக் கைவிட்டு, ஆசிரியர்களாக இருப்பவர்களையே அமர்த்தும்படியான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செலக்ஷன் போஸ்ட் என்பது போல நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கல்லூரியையோ அல்லது பள்ளியையோ குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புணர்ச்சியோடு நடத்தக்கூடிய அளவுக்கு எல்லா ஆசிரியர்களும் இருக்கிறார்கள் என்று ஏற்றுக் கொள்வது சற்று கடினம். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் உணர்ந்திருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமை வரும்போது அனுமதித்தாலும், அரசாங்கம் அதை ஊக்குவிக்கக்கூடாது என்பதற்காக அரசாங்க மானியம் தருவது கிடையாது. அப்படி நியமிப்பவர்களை இடைக்கால ஏற்பாடாக ஆறு மாதம், ஓர் ஆண்டு நியமித்து, பிறகு அதுகூட மாற்றப்பட்டிருக்கிறது. எனவே அரசு இதை ஊக்கப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படும் போது நிர்வாகத்திற்கு அந்த வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முன்பிருந்த துணைவேந்தர் அவர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தியிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பணி புரிவதைவிட, அந்த அளவுக்குப் படித்திருக்கிற மற்றவர்களைப் பணியில் சேர்த்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததாக அமையும். அதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அது குறித்து தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒன்று இந்தத் துணைக் கேள்வியை மூலக் கேள்வியிலிருந்து நேரடியாக எழுப்புவது முறையல்ல. பல்கலைக் கழகத்தைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் தான் விளக்கம் தர முடியும். ஆனால் பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்ட ஆராய்ச்சிக்காகப் பணிகளை மேற்கொள்ளும்

1990 ஏப்ரல் 12]

போது, வேலை வாய்ப்பு என்ற முறையிலே நியமனம் நடை பெற்றால், சிலர் வேலை வாய்ப்பு பெறுவார்களே தவிர, ஆராய்ச்சி நடக்காது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்லூரிகளிலே ஓய்வு பெற்ற ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்தும்போது அவர்களுக்கு அரசாங் கத்தின் மூலம் கொடுக்கின்ற ஓய்வூதியம் மட்டும் தருகிறார் களா அல்லது கல்லூரியில் கொடுக்கும் சம்பளம் மட்டும் கொடுக்கிறார்களா? அப்படி இரண்டும் கொடுத்தால், ஓய் வூதியத்தைக் கொடுக்காமல் இருக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் தான் விவரமான விடை தர முடியும். மற்றும் ஒன்று, ஓய்வூ தியம் யார் பெற்றாலும், அந்த ஓய்வூதியம் தவிர மிச்சம் இருக்கிற அளவுக்குத்தான் கடைசியாகப் பெற்ற ஊதியத்தை அந்த நிர்வாகம் அவர்களுக்கு வழங்கும் என்பது என் எண்ணம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, செல்ப்-பைனான்சிங் கல்லூரிகளிலும், ஈவனிங் காலேஜ்களிலும் ஓய்வு பெற்றவர்கள் வேலை செய் கிறார்கள். பார்ட்-டைம் என்ற முறையில் வேலை செய் கிறார்கள். அவர்களுக்கும் இந்த உத்தரவு பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 3696 மற்றும் 6228 மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், வினாக்கள் 868 மற்றும் 5120 மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் தள்ளி வைக்கப்படுகின்றன.

புதிய சலவைத் துறைகள்

*4163—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் கீழ்ப்பாக்கம், மேற்கு அண்ணா நகர், வியாசர்பாடி, வேளச்சேரி பகுதிகளில் புதிய சலவைத் துறைகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) சைதாப்பேட்டை சலவைத் துறை அபிவிருத்தி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) சைதாப்பேட்டை சலவைத் துறையை அபிவிருத்தி செய்ய சென்னை மாநகராட்சியினரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய சலவைத் தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கிக் கொடுத்து, சுத்தமான தண்ணீர் கொடுத்தால் அவர்களுக்கும் சூழ்நிலை நன்றாக இருக்கும், பொது மக்களின் சுகாதாரமும் நன்றாக இருக்கும். எனவே அத்தகைய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வி சென்னையில் கீழ்பாக்கம், மேற்கு அண்ணா நகர், வியாசர்பாடி, வேளச்சேரி பகுதிகளில் புதிய சலவைத் துறைகள் அமைப்பது பற்றியதாகும். இருப்பினும் பொதுவாக சென்னை மாநகரத்தில் இருக்கிற சலவைத் தொழில் செய்யும் இடங்கள் அனைத்திலும் தண்ணீர் வசதி கூடுமானவரை செய்து கொடுக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் பற்றாக்குறை ஏற்படுவதுபோல அங்கேயும் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட இடங்களில் சலவை நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரியுள்ள இடத்தில் அதை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கும்போது, சில இடங்களில் பொது மக்களுடைய எதிர்ப்பு வருகிறது. சில இடங்களில் நிலங்கள் கிடைக்கவில்லை. எனவே தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிற இடங்களில் எந்தவித குறையுமில்லாமல் பாதுகாக்கும் சூழ்நிலையை நம்முடைய அரசாங்கம் ஏற்கனவே 2, 3 மாதங்களுக்கு முன்னாலே சென்று பார்வையிட்டதற்குப் பிறகு, அந்த உத்தரவை அரசாங்கத்தின் சார்பாக இட்டிருக்கிறேன், அது நடவடிக்கையில் இருக்கிறது.

1990 ஏப்ரல் 12]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைப் பகுதி மக்களுக்கும் சரியானபடி தண்ணீர் வசதி இல்லை என்று பொது மக்களில் பலர் குறை சொல்கிறார்கள். அந்தப் பகுதியில் வாட்டர் பொலூஷன் வரும் என்று பொது மக்கள் அச்சப்படுகிறார்கள். எனவே தனிப்பட்ட இடத்தை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்கும் வேளச்சேரி போன்ற பகுதிகளிலே புதிதாக ஒரு சலவை நிலையம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் தட்டுப்பாடு என்பது எல்லா நேரங்களிலும் ஏற்படுகிற வழக்கம் இல்லை. கூடுமான வரை அதிக அளவு தண்ணீர் பரப்பின் மீது உறிஞ்சப்படுவதை அடுத்து எல்லா இடங்களிலும் ஏற்படுவது தான் அங்கேயும் ஏற்படுகிறது. அதற்கான தனிக் கவனம் செலுத்தப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்

திரு, மு. இராமநாதன் : துணைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், சுத்தம் சோறு போடும் என்பது முக்கியமான பழமொழிகள். பொதுவாக இந்தப் புதிய சலவைத் துறை கட்டுவதில் மிகுந்த முக்கியத்துவம் இருக்கின்றது. கண்ட இடத்திலே குட்டைகளிலே, குளங் களிலே கொண்டு போய் சலவை செய்து அதன் மூலம் உபயோகப்படுத்தப்படும் துணிமணிகள் மூலம் பல்வேறு வகையான நோய் நொடிகள் வருகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் பொதுவாக சென்னை மாநகரத்திற்கு மட்டுமன்றி எல்லா இடங்களுக்கும் சலவைத் துறை என்பது ஒரு முக்கியமானது என்பதைக் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டு இது போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடும் வகையிலே அரசு ஒரு குழுவை அமைத்தாவது சலவைத் துறை அமைப்பதில் கவனம் செலுத்துமா என்றும், அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்றும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு உறுப் பினரின் யோசனையை அரசாங்கம் ஏற்கெனவே ஏற்று அமல் நடத்தி வருகிறது. ஆனால் சில இடங்களில் கட்டு வதற்கு சாத்தியக் கூறு இல்லாமல் போகிறது என்று நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். அதைவிட எல்லா இடங் களிலே தெருத் தெருவாக கட்டுவது என்றாலும் பொது மக்களின் எதிர்ப்பு அதிகமாக இருக்கிறது. சில இடங்களில்